R5295

## SPIRITUAL PROMISES TO NATURAL ISRAEL

# மாம்சீக இஸ்ரயேலர்களுக்கு ஆவிக்குரிய வாக்குத்தத்தங்கள்

வேத வாக்கியங்களில் ஆவிக்குரிய என்ற வார்த்தை நமது கர்த்தர் மற்றும் அவரை ஏற்றுக்கொண்டு, தேவனுடைய சித்தத்தை செய்ய தங்களை அர்ப்பணம் செய்தவர்களைப் போல ஆவியில் ஜெனிப்பிக்கப்பட்டவர்களை குறிப்பாக ஒரு தனிப்பட்ட வழியில் குறிப்பிடவே பொதுவாக பயன்படுத்தப்படுகிறது. இவைகளைச் சார்ந்த அனைத்து காரியங்களும், அனைத்து வாக்குத்தத்தங்களாகவும் சொல்லப்பட்டிருக்கின்றன. "ஜென்ம சுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான். அவைகள் அவனுக்கு பைத்தியமாகத் தோன்றும்; அவைகள் ஆவிக்கேற்ற பிரகாரமாக ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால், அவைகளை அறியவுமாட்டான்." (1 கொரிந்தியர் 2:14) ஆகையால் ஆவிக்குரிய யுகத்திற்கு முன்னதாக இஸ்ரயேலர்களுக்கு ஆவிக்குரிய எதையாவது கொடுத்திருந்தால், அதை அவர்கள் அவைகளின் மதிப்பை சரியாக உணர்ந்து கொண்டிருக்கமாட்டார்கள். ஏனெனில் பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டவர்களைத் தவிர யாரும் உணர்ந்து கொண்டிருக்க முடியாது.

எனினும், மாம்சீக இஸ்ரயேலருக்கு ஆவிக்குரிய காரியங்கள் கொடுக்கப்பட்டன. அதை அவர்களால் பெற்றுக்கொள்ள முடியவில்லை. அப்போஸ்தலர் கூறுகிறதாவது: "நியாயப்பிரமாணம் ஆவிக்குரியதாக இருக்கிறது. நானோ பாவத்துக்கு கீழாக விற்கப்பட்டு, மாம்சத்துக்குரியவனாயிருக்கிறேன்." (ரோமர் 7:14) சீனாய் மலையில் கொடுக்கப்பட்ட அந்த நியாயப்பிரமாணமானது, ஆவிக்குரிய ஜீவிகளிலேயே மிகவும் உயர்ந்தவராகிய தேவனாலே கொடுக்கப்பட்டது. அது மாம்சீக சுபாவத்தையும், சரீரத்தையும் மாத்திரம் கட்டுப்படுத்தாமல் இருதயம், மனம் மற்றும் சித்தத்தை கட்டுப்படுத்துகிறது. யூதர்களில் யாரும் அதை கடைபிடிக்க முடியவில்லை. ஏனெனில் அவர்கள் பாவத்துக்கு கீழாக விற்கப்பட்டார்கள். அது ஆவிக்குரிய பிரமாணமாக, பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டவர்களோ அல்லது தேவனுடைய ரூபத்தில் இருக்கிறவர்கள் மட்டுமே கடைபிடிக்கக் கூடியதாக இருந்தது.

### நியாயப்பிரமாணத்தில் ஆவிக்குரிய பாடங்கள்

நியாயப்பிரமாணத்தின் சில குறிப்பிட்ட பாடங்கள் ஆவிக்குரியவைகளாகவும் இருக்கின்றன. உதாரணத்திற்கு, அடிக்கப்பட்டவுடனேயே தண்ணீர் அபரிமிதமாக வந்ததே அந்த பாறை மற்றும் மன்னா ஒவ்வொரு ஆவிக்குரிய பாடத்தை தருகிறது. ஆனால் இஸ்ரயேலர்கள் ஆவிக்குரிய பாறையைப் பற்றியோ அல்லது ஜீவத் தண்ணீரைப் பற்றியோ புரிந்து கொள்ளவில்லை. அதே போலவே அவர்களுக்கு கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாணத்தையும் புரிந்து கொள்ளவில்லை. அவர்கள் அதன் வெளிப்பாகத்தை அல்லது மேல் ஓட்டை மட்டும் பார்க்க முடிந்தது. பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்படும் காலம் வரை மேலும் எதையும் பார்க்க முடியவில்லை. இஸ்ரயேலருக்கு அநேக மாபெரும் ஆவிக்குரிய காரியங்கள் வெளிப்படுத்தப்பட்டன. ஆனால் உத்தம இஸ்ரயேலர்கள், தேவனுடனான நல்லிணக்கத்துடன் ஏற்ற காலத்தில் இவைகளை பார்க்கும்படி செய்யப்படும் என்று நாம் சொல்லக்கூடும்.

நியாயப்பிரமாணத்தில் ஆவிக்குரிய காரியங்கள் எப்பொழுதுமே இருந்தன. ஆனால் அவைகள் வெளிப்படுத்தப்படவில்லை, பகிரங்கப்படுத்தப்படவில்லை, யூதர்களால் காணப்படவில்லை. ஏனெனில் அவர்களது சொந்த மனநிலைமை அப்படியிருந்தது. ஆவிக்குரிய காரியங்களை காணும்படி அனுமதிக்கப்பட்ட முதல் யூதன் இயேசு தான். அவர் பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்ட பிறகு தான் அவரால் அவைகளை உணர்ந்து கொள்ள முடிந்தது. ஆனால் யூத இனம் தேவையான தர நிலைக்கு வராததால் அதை உணர்ந்து கொள்ள முடியவில்லை. கிறிஸ்துவின் அடிச்சுவட்டில் நடக்க விரும்பி, அவர் மூலம் ஒரு மூடுதலைப் பெற்று பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்ட குறிப்பிட்ட சிலரால் மட்டுமே ஆவிக்குரிய காரியங்களை உணர்ந்து கொள்ள முடிந்தது. இதனால் அப்போஸ்தலர், "மாம்சத்தின் படி நடவாமல் ஆவியின்படி நடக்கிற நம்மிடத்தில் நியாயப்பிரமாணத்தின் நீதி நிறைவேறியது" என்று கூறுகிறார். நியாயப்பிரமாணத்தை நம்மால் மாம்சத்தின்படி கைக்கொள்ள முடியாது. ஆனால் ஆவியின்படி கைக்கொள்ள முடியும். "என் மனதினாலே தேவனுடைய நியாயப்பிரமாணத்துக்கு ஊழியம் செய்கிறேன்." (ரோமர் 8:4; 7:25)

### ஆவிக்குரிய நுண்ணறிவின் அடிப்படை

தேவன், ஆபிரகாமுடன் உடன்படிக்கை செய்த போது, "உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும்" என்று கூறினார். ஆபிரகாமின் சந்ததி வானத்து நட்சத்திரங்களைப் போலவும் கடற்கரை மணலைப் போலவும் இருக்கும் என்று கூறினார். அப்போஸ்தலர் பேதுரு குறிப்பிடுவது போல, இந்த ஆவிக்குரிய வாக்குத்தத்தம் அந்த சமயத்தில் யூதர்களால் உணர்ந்து கொள்ளப்படவில்லை. ஒரு ஜாதியாக அவர்கள் தேவனுடைய குமாரனை சிலுவையில் அறைந்ததை உணர்ந்த போது, அநேகர், நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டார்கள். பரிசுத்த பேதுரு கூறினதாவது: "நீங்கள் மனந்திரும்புங்கள்....... வாக்குத்தத்தமானது உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும் உண்டாயிருக்கிறது. " (அப்போஸ்தலர் 2:38,39) அது ஒரு ஆவிக்குரிய வாக்குத்தத்தம். ஆனால் அவர்கள் சில குறிப்பிட்ட நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

ஒரு சில யூதர்கள் மட்டுமே இந்த நிலைமைக்கு வர சரியான மனோபக்குவத்தில் இருந்தார்கள். “அவர் தமக்கு சொந்தமானதிலே வந்தார். அவருக்குச் சொந்தமானவர்களோ அவர்களை ஏற்றுக்கொள்ளவில்லை....... அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனை பேர்களோ அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார்.” (யோவான் 1:11,12) இவர்கள் ஆவிக்குரிய இஸ்ரயேலர்களுடன் உறவுக்குள் வந்து, இப்படிப்பட்ட இஸ்ரயேலர்கள் ஆவிக்குரிய காரியங்களை உணர்ந்து கொள்ள உதவும்படியாக பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டார்கள். மாம்சீக இஸ்ரயேலர்களுக்கு தேவன் கொடுத்தவைகளிலிருந்தே நாம் சகல சத்தியத்துக்குள்ளும் இழுக்கப்பட்டோம். மாம்சீக இஸ்ரயேலர்களால் புரிந்து கொள்ள முடியாமல் இருந்தும் கூட நாம் அவைகளை புரிந்து கொள்ள முடிந்தது. அப்போஸ்தலர் கூறுகிறதாவது: “இஸ்ரயேலர் தேடுகிறதை அடையாமலிருக்கிறார்கள் தெரிந்துகொள்ளப் –பட்டவர்களோ அதை அடைந்திருக்கிறார்கள்; மற்றவர்கள் இன்றைய தினம் வரைக்கும் கடினப்பட்டிருக்கிறார்கள்.” (ரோமர் 11:7) ஆகையால் அவர்கள் புரிந்து கொண்டார்களோ இல்லையோ, ஆவிக்குரியவைகளை தேடுகிறார்கள். சிலரைத் தவிர மற்றவர்கள் யாரும் ஆவிக்குரியவைகளை அடையவில்லை. ஏனெனில் அவர்களது மன நிலைமை சரியானதாக இல்லை. ஆனால் தேடுவதற்கு ஆவிக்குரியவைகள் அங்கே இருக்க வேண்டும். இல்லையென்றால் அவர்களால் தேட முடியாது.